Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    புரட்டாதி 03    ( 19 - 09 - 1991 )    வியாழக்கிழமை    ஓசை: 213

## மருந்து விற்பனையில் மோசடி

(யாழ்ப்பாணம்)

முக்கியமான சிலமருந்துக் குளிசைகளை நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் ஆங்கில மருந்துகள் விற்பனையாளர் ஒருவர் விற்பனை செய்துள்ளார். 1000 குளிசைகள் அடங்கிய அம்பிசிலின் பெட்டி ஒன்றின் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூபா 1650 இதை இந்த வர்த்தகர் தனியார் வைத்திய நிறுவனங்களுக்கு ரூபா 2500க்கு விற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. மருந்து விலைகளின் சந்தைவிலையை ஆங்கிலமருந்து வர்த்தகர்சங்கமே நிர்ணயிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கமும் தனியார் வைத்தியர் சங்கமும் இணைந்து மருந்துப் பொருள்களை கொழும்பிலிருந்து தருவிக்க அனுமதி வழங்கப்பட்ட வர்த்தகர் மூவரில் ஒருவரே இவ்வாறு பலகுளிசை வகைகளின் விலையை உயர்த்தி விற்றுள்ளார். இதனால்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாகரனுக்கு தொண்டமான் கடிதம்

## அரசியல் தீர்வுகளுக்கு சில முன்யோசனைகள்

(நமது நிருபர்)



இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைக்குரிய அடிப்படை அம்சங்கள் குறித்து உல்லாசப் பிரயாணத்துறை, கிராமியத் தொழில்துறை அமைச்சரும், இலங்கை தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவருமான தொண்டமான், தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இதனை அவர் 'இந்தியன் எகஸ்பிரஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின்போது தெரிவித்தார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்னை சென்றுள்ள அமைச்சர் தொண்டமான் தமிழ்நாட்டில் உள்ள தமது மூதாதையர் இல்லத்தில் வைத்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்குப் பேட்டியளித்தார். அப்பேட்டியின்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையக்கூடிய குறைந்த பட்ச கோரிக்கைகளை விளக்கி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனுக்கு தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

இந்த மாதம் 7ஆம் திகதி இந்தக் கடிதத்தை தான் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்ததாகவும், கொழும்பு திரும்பியதும் அவரிடம் இருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும் தொண்டமான் தெரிவித்தார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலேயே தான் இந்த முயற்சியை எடுப்பதாகவும் இதற்காக, சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் இருந்து அமைச்சர் என்ற முறையில் அனுமதி பெறவில்லை என்றும்,

தான் முன்வைத்த அடிப்படை கோரிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணங்கிக்கொள்ள முடியுமானால் இலங்கையில் உள்ள தமிழர்களின் பெரும்பாலான அபிலாஷைகள் பூர்த்தியாக்கப்பட்டு விடமுடியும் என்றும்,

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினால் மாத்திரமே இலங்கையில் சமாதானத்தை கொண்டுவர முடியும் என்றும் தொண்டமான் தனது பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் ராஜீவ் காந்திக்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் இடையில் 1987 இல் கைச்சாத்தான ஒப்பந்தம் தமிழீழத்தைத் தவிர சகலத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றக் கலைப்பு அபிவிருத்திக்குத் தடை -பிரேமதாசா

(கொழும்பு)

அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள பாராளுமன்றக் ...

நேற்றுமுன்தினம் கொழும்பில் அமைச்சுக்களின் செயலாளர்கள்மத்தியில்பேசிய பிரேமதாசா அபிவிருத்தி நடவடிக் ...

மாதாந்தம் நீடிக்கும் பிரேரணைக்குப் பாராளுமன்றம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(சுன்னாகம்)

மணலாறு மாவட்டத்தில் கடந்த மூன்று வாரங்களாக சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் உக்கிர மோதலில் வீரமரணமடைந்த பதினாறு வீரவேங்கைகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று நண்பகல் முதல் சுன்னாகம் சந்தைக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்தன.

பல்லாயிரக்கணக்கானமக்கள் நீண்டவரிசையில் நின்று வேங்கைகளின் புகழுடல்களுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

குழந்தைகள், சிறுவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நீண்டவரிசையில் நின்று பல மணிநேரமாகக் கொளுத்தும் வெயிலையும் பாராது தமது அஞ்சலியைச்செலுத்தியது பல நெஞ்சங்களையும் நெகிழ வைத்தது.

செங்கம்பளம் விரிக்கப்பட்ட விசேட மேடையில் வேங்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 16 ஆம் திகதி மோதலில் வீரமரணமடைந்தோர்

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின்போது தீவிரமாகப் போராடி கடந்த 16 ஆம் திகதி வீரமரணமடைந்த போராளிகள்விபரம்வருமாறு:

★ டொமின் (தவராணி யோககுரு, வேம்படி வல்வெட்டித்துறை)

★ றோசான் (தவராணி சிவசுப்பிரமணியம், பொலிகண்டி வல்வெட்டித்துறை)

★ பூபதி (இராசமாணிக்கம் பிறேமலதா, வல்வெட்டித் துறை சந்தி ஒழுங்கை)

★ காஞ்சனா (சாந்தி அருமத்துரை, மானிப்பாய் சுதுமலை தெற்கு சாவற்காடு)

★ லோஜி (தர்மலிங்கம்கௌரிமலர், மிருசுவில் புனர்வாழ்வு திட்டம்)

★ நிரஞ்சினி (வசந்தகுமாரி ஏகாம்பரம், வங்கேரியன்குளம் கிளிநொச்சி)

★ யவா (நாகராசா தனபாலன், தும்பளை பருத்தித்துறை

★ திலீப் (தங்கவடிவேலன் கிருஸ்ணகுமார், சுன்னாகம் குறாவத்தை)

★ கல்கத் (மார்க்கண்டு மதனருபன், புத்தூர் கிழக்கு விக்கினேஸ்வரா வீதி)

★ டொமினிக் (நடேசன் குமரேசன், நீர்வேலி வடக்கு இராசவீதி)

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்று மோதலில் 69 இராணுவம் பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் இருபது நாளாகத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் தொடர்ந்தும் குண்டுவீச்சில் ஈடுபட்டுள்ள வேளையிலும் புலிகள் தொடர்ச்சியாக இராணுவம் மீது தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை நேற்றுநடந்த மோதலில் குறைந்த பட்சம் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டும்14 பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. அத்தோடு இது

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாக கூட்டம் நடத்த முயற்சி; 13 பேர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடாத்தப்படவிருந்த கூட்டம் ஒன்றிற்குத் தடை விதிக்கப்பட்டதைக் கண்டித்து பல உள்ளூர் அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்த முற்பட்டபோது ஏழு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

வேலூரில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கூட்டத்தைச் பொலி...

## உலர் உணவு பெறாதோர்

மேற்கொண்டு சென்னை சென்றுள்ள அமைச்சர் தொண்டமான் தமிழ்நாட்டில் உள்ள தமது மூதாதையர் இல்லத்தில் வைத்து 'இந்தி

புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனுக்கு தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலேயே நான் இந்த முயற்சியை எடுப்பதாகவும் இதற்காக, சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் இரு

னால் இலங்கையில் உள்ள தமிழர்களின் பெரும்பாலான அபிலாஷைகள் பூர்த்தியாக்கப்பட்டு விடமுடியும் என்றும், இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினால் மாத்திரமே இலங்கையில் சமாதானத்தை கொண்டுவர முடியும் என்றும் தொண்டமான் தனது பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் ராஜீவ் காந்திக்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் இடையில் 1987 இல் கைச்சாத்தான ஒப்பந்தம், தமிழீழத்தைத் தவிர சகலத்

(4ஆம் பக்கம் பார்க்க)

பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் தொடர்ந்தும் குண்டுவீச்சில் ஈடுபட்டுள்ள வேளையிலும் புலிகள் தொடர்ச்சியாக இராணுவம் மீது தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை நேற்று நடந்த மோதலில் குறைந்த பட்சம் நான்கு இராணுவத்தினர்

# பாராளுமன்றக் கலைப்பு அபிவிருத்திக்குத் தடை -பிரேமதாசா

(கொழும்பு)

அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள பாராளுமன்றக் கலைப்பு தடையாக அமையும் என்றும் ஆகவே பாராளுமன்றக் கலைப்பிற்கான சாத்தியம் எதுவுமில்லையென சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் அமைச்சுக்களின் செயலாளர்கள்மத்தியில்பேசிய பிரேமதாசா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தடையாக இருக்கும் பாராளுமன்றக்கலைப்பை தான் செய்யமாட்டேன் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போதைய அவசரகால பிரமாணங்களை

## சர்ச்சை நீடிப்பது நாட்டிற்குப் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவைப் பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பான சர்ச்சை இன்னமும் தீர்க்கப்படாமல் நீடிப்பது ஜனாதிபதி பதவிக்கும் நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்துவதாகும் இவ்வாறு நேற்றுக் கூடிய அரசாங்க பாராளுமன்றக் குழுவின் நூற்றுப் பதினாறு உறுப்பினர்களும் ஏகமனதாகத் தீர்மானித்து உள்ளனர்.

மேலும் இம் மாதம் மூன்றாம் திகதி நூற்றுப் பதினாறு உறுப்பினர்கள் கையெழுத்திட்ட படிவம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டபின்பு நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும் அரசாங்கபாராளுமன்றக் குழு அதிருப்தி தெரிவித்துள்ளது.

மாதாந்தம் நீடிக்கும் பிரேரணைக்குப் பாராளுமன்றம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப் பிரேரணை மனு 24இல் விவாதத்திற்குவரும்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீது குற்றப் பிரேரணை தெரிவிக்கும் மனு மீதான விவாதம் இருபத்து நான்காம் திகதி பாராளுமன்றம் கூடும்போது விவாதத்திற்கு வரலாம் என்று சபாநாயகர் கூறியுள்ளார்.

அதிபர் ஆட்சிமுறையை கவிட்டு வலுமிக்க பாராளுமன்றம் மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டுமென்ற ஐதேக கிளர்ச்சியாளர்களின் கோரிக்கையும் பதினான்கு மாதங்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோது புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பாகவும் பாராளுமன்றம் கூடும்போது விவாதங்கள் நடைபெறலாம் என்று தெரிய வருகின்றது.

குற்றப் பிரேரணை மனு முறைப்படி கையளிக்கப்படாமையால் காலாவதியாகிவிட்டது என்ற சட்டமா அதிபரின் ஆலோசனையைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கலைக்கும் உரிமை தமக்கு மீளவும் வந்து விட்டதாக ஜனாதிபதி கூறியிருந்ததும், அதனைச் சபாநாயகர் ஏற்க மறுத்திருந்தமையும் தெரிந்ததே.

> "எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப் போல் தான் நாளை எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும் வருத்தப்படும்.
>
> — திலீபன்
>
> தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பொருள்கள் சூறை, தீவைப்பு இராணுவம் அட்டூழியம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சான் மூதூர் போன்ற பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த சில நாட்களாக அப்பாவிப் பொதுமக்களை கைது செய்வதிலும் அவர்களின் சொத்துக்களை அழிப்பதிலும் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

கட்டைப்பறிச்சானிலுள்ள மருதநகர் என்ற பகுதியில் கடந்த 11 ஆம் திகதி இராணுவத்தினர் ஒரு பொதுமகனைக் கைது செய்துள்ளனர். அத்துடன் கடந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு ஆதரவாக

## கூட்டம் நடத்த முயற்சி; 13 பேர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடாத்தப்படவிருந்த கூட்டம் ஒன்றிற்குத் தடை விதிக்கப்பட்டதைக் கண்டித்து பல உள்ளூர் அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்த முற்பட்டபோது ஏழு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

வேலூரில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கூட்டத்தைச் பொலிசார் தடை செய்ததைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட இளைஞர் அணி, இந்திய மக்கள் முன்னணி, தமிழ் நாடு மக்கள் இயக்கம், மார்க்சிய பெரியாரிச பொதுவுடமைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு பெறாதோர் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிளை அலுவலகத்தில் வன்செயலால் பாதிப்புற்றோருக்கு உலர் உணவு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 90 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தின் பின் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இறந்த, காணாமல் போன, ஊனமுற்றோர் ஆகியோருக்கே மேற்படி உலர் உணவு விநியோகிக்கப்படுகின்றது.

இவற்றின் பெறுமதி மூந்நூற்றிப் பதினைந்து ரூபா எனவும் இதுவரை இவற்றைப் பெறாதவர்கள் உடனடியாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர்ப்பகுதியில் மேலும் சிலர் கடத்தல்

வவுனியா நகர்ப் புறத்தில் இனந்தெரியாத நபர்களினால் மேலும் சிலர் கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டுள்ளனர்.

சேமமடு பகுதியைச் சேர்ந்த சிவசேகரம் என்ற குடும்பஸ்தர் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகர்ப் பகுதி சென்று காணாமல் போயுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## "சகல ஆயுதங்களையும் பாவித்தும் நகர முடியாமல் போய்விட்டது"

### - இராணுவப் பேச்சாளர் ஆதங்கம்

சகலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்திக் கடும் தாக்குதல் நடத்தியபோதிலும் புலிகளின் முகாம் நோக்கி நகர விடாமல் அவர்களின் எதிர்த்தாக்குதல்கள் தடுத்து விட்டதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அவர் முல்லைத்தீவின் அடர்ந்த காட்டிற்குள் இருக்கும் புலிகளின் முகாம்களைக் கைப்பற்றுவதற்கு பதினெட்டு நாளாகத் தொடர்ந்து சண்டையிட்டுவரும் இராணுவத்தினர் புலிகளின் மிகக் கடுமையான எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்,

புலிகள் தங்களிடம் இருக்கும் சகலவிதமான ஆயுதங்களையும், தந்திரோபாயங்களையும் இச்சண்டையில் பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை புலிகளின் முகாமை கைப்பற்ற இராணுவத்தினர் எடுத்த முயற்சியை புலிகள் முறியடித்ததையும் அவர் ஒப்புக்கொண்டார்.

புலிகளுக்கு எதிரான போ

(4ஆம் பக்கம் பார்க்க)

## 41-ம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம் 14 — 06 — 1976

வீர மரணம் 10 — 08 — 1991

### வீரவேங்கை நடேஸ்
(தங்கையா திருச்செல்வம்)

ஆனையிறவு முகாம் தகர்ப்பின்போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்

சரித்திரத்தில் உன் சாவு சகிக்க முடியாதடா
தாண்டு போயிருந்த தமிழன் உரிமைகளை
தோண்டி எடுக்க செல்வா நீ துப்பாக்கி எடுத்தவனே
அதிகாலை ஒன்றிற்காய் அஸ்தமித்த வேளையில்
உலகத்தின் உள்ளத்தில் உதயமாகி விட்டாயே!

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரன், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமகன்,
மருமகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

பசுமின் வீதி,
3-ம் வாய்க்கால்,
பரந்தன்.
(R/1759)

## ஆயுதங்கள் கண்டு பிடிப்பு
(சென்னை)

இராமநாதபுரத்தில் கடந்த வியாழக்கிழமை இரண்டு சப்மெஷின்கன்களையும், 1370 சுற்றுத் தோட்டாக்கள் ஐந்து கிரனைட்டுகளையும் இந்திய சுங்கப் பகுதியினர் கண்டு பிடித்ததாகக்கூறப்படுகிறது.

1,20,000 ரூபா பெறுமதியான இந்த ஆயுதங்கள் மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த போது கண்டு பிடிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

## அமெரிக்காவில் தேர்தல் சூடு
(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற ஒரு வருடம் இருக்கையில் இப்பொழுதே அங்கு சூடுபிடிக்கத் தொடங்கி விட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1992ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இப்போதே சூடுபிடிக்கத்தொடங்கியுள்ளது. குடியரசு ஜனாதிபதி புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிட ஜனநாயகக்கட்சியினர் அணிவகுத்து வருகின்றனர்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்



### திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்

அணைந்த ஆசிரிய தீபம் திருமதி. பொன்னம்மா சுப்பிரமணியம் அவர்கள் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் 20 வருட காலமாக கல்விப்பணியாற்றிய பின்பு - பொற்பதி பிள்ளையார் திருப்பணிகளில் ஈடுபட்டவராவார். 22-08-91 அன்று சிவபதமடைந்த அன்னாரின் இறுதி வைபவங்களில் எல்லா வகையிலும் உதவிய பேரன்பர்களுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

எதிர்வரும் 21-09-91 சனிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் -காலை 10.30 மணிமுதல் - கலந்து கொள்ளுமாறு அனைவரையும் விசேடமாக பழைய மாணவர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

'பொற்பதி'
பொற்பதி வீதி,
கொக்குவில்.

துணைவன் ஆர். ரி. சுப்பிரமணியம்
மகன் சு. குமாரமூர்த்தி
மருமகள் கு. கமலகுமாரி
(R/1756)

## சோவியத் வாபஸ் பெற்றாலும்
## அமெரிக்கா தளத்தை வாபஸ் பெறமாட்டாது
(வாஷிங்டன்)

கியூபாவிலிருந்து சோவியத் தனது படைகளை வாபஸ் பெற்றாலும்அமெரிக்கா தனது கடற்படையை வாபஸ் பெற மாட்டாது என யு எஸ். பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சோவியத்படை வாபஸை அடுத்து அமெரிக்காவும் குவண்டமானோ தளத்திலிருந்து வாபஸ்பெற வேண்டுமென கடந்த சனிக்கிழமையன்று கியூபாகோரியிருந்தது.

சோவியத்துருப்புகள்வாபஸ் பெறுவது கியூபா மீது அமெரிக்கா தாக்குதலை நடத்த அழைப்பு விடுப்பதைப்போல் உள்ளது என்றும், எனவே அமெரிக்கா தனது கடற்படைத் தளத்தைக் காலி செய்ய வேண்டும் என்றும் கியூபா தெரிவித்திருந்தது.

ஒருதலைப் பட்சமாகவும் நிபந்தனையற்ற முடிவின்பேரிலும் சோவியத் படைகளை வாபஸ்பெறுவது அமெரிக்காவுக்கு பச்சை விளக்கைக் காட்டுவது போல் உள்ளது என அது மேலும் தெரிவித்துள்ளது.

குவண்டமானோ தளம்பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்தது சோவியத் படைவாபஸுடன் சம்பந்தமில்லாத ஒரு அம்சம் அது. இப்பிராந்தியத்தில் அமெரிக்க கடற்படைக் குழுக்களுக்குப் பயிற்சியும் இதர வசதிகளும் அளிக்கும் தளம் அது என பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுவிழா
(யாழ்ப்பாணம்)

சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நாளை மறுதினம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

யாழ். இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்படவுள்ள மேற்படி விழாவில் கருத்தரங்கு மற்றும் வழக்காடுமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன இவ்விழாவில் யாழ். நகரப் பாடசாலை மாணவர்கள் பலர் பங்குபற்றுகின்றனர். இவ்விழா யாழ். இந்து அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வரி விளம்பரம்

### தேவை
வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. இணுவில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் அண்ணா கோப்பிக் கடைகளிலும் ஏற்கப்படும். மில்க்வைற் யாழ்ப்பாணம்.
(B/3133)

## எம். பிக்கள் விஜயம்ரத்து

கடந்த 14 ஆம் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்ய இருந்த எதிர்க்கட்சி எம். பிக்களின் பிரதிநிதிகளின் விஜயம் ரத்துசெய்யப்பட்டது. விமான வசதிஇன்மையாலேயேவிஜயம் ரத்தாகியதென பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## பெற்றுக் கொள்ளவும்
(யாழ்ப்பாணம்)

சுவையருவி உணவகத்தில் நேற்றைய தினம் பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்றும் இராசரத்தினம் செல்வராஜ் (703461778 V) என்பவரது அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

★ ★ ★

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சிவமணி, இராசலிங்கம் என்பவரது தமிழீழ மீட்புநிதி செலுத்தியதற்கான சிட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### வீரவேங்கை பூர்ணிமா
(பேரம்பலம் வசந்தி)

வீரஜனனம் 04.04.1968

வீரமரணம் 06.08.1991

அறுபத் தெட்டில் அடியெடுத்து வைத்த
அன்னை மண் பூவே பூர்ணிமா
அன்னை தந்தை உனக்கு என்று

## 45-ம் நாள் நினைவஞ்சலி



## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரஜனனம் 30-06-1972



வீரமரணம் 05-08-1991

### வீரவேங்கை நாராயணன்
(நாகமுத்து யோகலிங்கம்)

நேரிடா தெம்மை நேசித்த செல்வமே
வாய்விடாது உண்மை கூவித்தான் அழைக்கின்றோம்
தேய்விலா மதிபோல திகழும் உன் சிரிப்பை
மாய்ந்து போகின்ற எமக்கொருக்கால் காட்டாயோ?

19-09-1991 இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற நினைவஞ்சலி, ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு இவரது இயக்க உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித நகர்,
சற்கோவளம்,
பருத்தித்துறை.

அம்மா, அப்பா,
உறவினர்கள்.

(R-1764)





## வீரவேங்கை பூர்ணிமா
(பேரம்பலம் வசந்தி)

| | |
|---|---|
| வீரஜனனம் | வீரமரணம் |
| 04.04.1968 | 06.08.1991 |

அறுபத் தெட்டில் அடியெடுத்து வைத்த
அன்னை மண் பூவே பூர்ணிமா
அன்னை தந்தை உனக்கு என்று
அள்ளித் தந்த பாசம் எங்கே
நிர்மலா, மணிமாலா, உதயன், குமார்
நிழல் போல் பிள்ளை வசந்தன் துணை
நிஜவாழ்வின் குடைபோல் அருகில்
மாமா மாமியென பலர் சூழ்ந்திருக்க
பகைவன் கதை முடிக்க நீ
பாய்ந் தாயோ வேங்கை வடிவில்
ஆனை இறவில் ஆயுதம் ஏந்தி நீ
ஆவேசம் கொண் டெழுந்து சென்றவுடன்
கொழும்புத்துறை ஆலய மணி ஒலித்திடவே
கொழும்பின் இங்களம் கலங்கு மளவிற்கு
கொழுந்து வைத்தாயோ மண்மீட்புப் போரில்
சுடர் விட்டு எரிய உன்னுடலை ... ...

★ ★ ★

தமிழ் மானம் காத்திட குருதியில் உறுதியாய்
தனித்துவமாய் நின்ற எம் பூர்ணிமா
உன் பிரிவு எம்மையும் எம்மினத்தையும்
உருக வைத்து தினம் வாட்டுகிறது

★ ★ ★

துரையப்பா பள்ளியில் வித்திட்ட வேங்கையே
தமிழ் கன்னியர்மடத்து நண்பிகள் இட்டமாலை
வையகத்தை விழிப்பூட்டின மெய்யகத்தைக் காட்டின
வேங்கை பூர்ணிமாவுக்கு எங்கள் கவியஞ்சலி!

இன்று 19-09-1991 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன வைபவத்தில் பங்குபற்றுமாறு நண்பர்கள், உற்றார்கள், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

இப்படிக்கு

10, 3ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை கிழக்கு.

பெற்றோர், சகோதரர்கள்,
மாமி மாமா, மைத்துனர்கள்,
மச்சாள்மார், பிள்ளைகள்.

(R/1755)



## லெப். பானு
(திருச்செல்வம் தெம்சிகுமார்)

(சிலாவத்தையில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்)

| | |
|---|---|
| தாயின் மடியில் | தமிழீழ மண்ணில் |
| 15-07-1973 | 06-08 1991 |

எம் அன்புப் பானுக்குட்டிக்கு: ...

தமிழீழப் பெரும்படை சேர்ந்தான் பானு
தந்தைதிருச் செல்வந்தாய் மாலாவுக்கு
தமையன்னிர், தமக்கையீர் பின்பதாக
தங்கை தம்பி சென்டோடு முல்லைத்தீவில்
தமிழ் மறவன் சங்கர் தேம்சிகுமார் பிறந்து

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதில்
ஆண்மையுறு 'புலி'யணியிற் சேர்ந்து சிலாவத்தை
அடிவாட்டில் அராஜகரை அழித்து வீழ்த்தி
அங்கிருந்து அமலனவன் அழைப்பையேற்று
அவ்வுலகஞ் சென்றான் அங்கவனின் ஆன்மா

சாந்திபெறச் சரித்திரத்தில் புலிக்கொடியே
சத்தியத்தின் துணையோடு தமிழ்மண் மீது
சமாதான ஆட்சிசெய்ய வேங்கைகளின்
இலட்சியப் பாதையில் வீறுநடை போடுவோம்.

உங்கள் இலட்சியம் நிறைவேற பிரார்த்திக்கும்:

10/2, சென்செபஸ்ரியன் வீதி,
பாசையூர்,
யாழ்ப்பாணம்.

மாமா: பிரான்சிஸ்,
மாமி: பி. அஞ்சலா,
மச்சான்: யோகேஸ்வரன்,
மச்சாள்: சிறியோகேஸ்வரி

(R/1758)

19-09-1991 [illegible] பெறுகின்ற நினைவஞ்சலி, ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு இவரது இயக்க உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித நகர்,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

அம்மா, அப்பா,
உறவினர்கள்.

(R-1764)

ரத்தைச் சேர்ந்த திருமதி சிவமணி, இராசலிங்கம் என்பவரது தமிழீழ மீட்புநிதி செலுத்தியதற்கான சிட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 19

சிறி



1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மூதூரில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

லெப். துரைச்சாமி (விநாயகமூர்த்தி பொடியப்பு - பெருவெளி, மூதூர்)

1989ஆம் ஆண்டு நீர்வேலியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

சிறி (சற்குணராசா பாஸ்கர் - திருநெல்வேலி)

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பல்வேறு இடங்களிலும் சிறிலங்காப்படையினராலும் முஸ்லிம் ஊர்காவல்படையினராலும் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்ட குழந்தைகள் பெண்கள் உட்பட 35 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

: விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 5143)

### சிந்தனைக்கு

செயல் மறக்கப்படலாம்; ஆனால்
அதன் விளைவு தொடர்கிறது.

— ஒவிட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்; 19-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2339 நிர்வாகபீடம் 2303
ஏ பி. எண் 12

## ஓட்டைகள் நிறைந்த அரசியலமைப்புச் சட்டம்

லண்டனில் நூலகம் சென்ற ஒருவர் ஆவணக் காப்பகப் பகுதிக்குச் சென்று சிறிலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கின்றதா என வினாவினாராம். அதற்கு அங்கு கடமையில் இருந்த நூலகர் சஞ்சிகைப் பகுதியில் சென்று பார்க்குமபடி பதிலளித்தாராம். இவ்வாறு ஒரு ஜோக் அடிக்கடி மாறும் சிறிலங்கா அரசியலமைப்புச் சட்டம் பற்றி வெளிவந்ததுண்டு.

தற்பொழுது கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியலமைப்புச்சட்ட நெருக்கடி அந்த ஜோக்கைத்தான் நினைவுபடுத்துவதாகவுள்ளது. பாராளுமன்றத்தில் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றவியல் விசாரணை மனு பாராளுமன்றப் பதிவேடுகளில் பதியப்படாமையினால் காலாவதியாகிவிட்டது என சிறிலங்கா ஜனாதிபதிக்கு சட்டமா அதிபர் ஆலோசனை கூறியுள்ளார். இதனை ஆதாரம் காட்டி சிறிலங்கா ஜனாதிபதி இனிப் பாராளுமன்றத்தில் குற்றவியல் விசாரணை மனு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியாது எனச் சபாநாயகருக்குத் தெரிவித்துள்ளதோடு, குற்றவியல் விசாரணை மனு காரணமாக பாராளுமன்றத்தைக் கலைக்கும் தனக்கிருந்த உரிமை இடைநிறுத்தி வைக்கப்பட்டமையும் இனிச் செல்லுபடியாகாது எனவும் தற்பொழுதுதான் பாராளுமன்றத்தைக் கலைக்கும் உரிமையை அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சபாநாயகரோ, எதிர்க்கட்சியினரோ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட அதிருப்தியாளர்களோ பாராளுமன்றத்தில் குற்ற விசாரணை மனு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளதோடு சபாநாயகரின் உரிமையில் சிறிலங்கா ஜனாதிபதி தலையிடுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் உண்டே ஒழிய சபாநாயகரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லை எனவும், அவரது கருத்து ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் சட்டமா அதிபர் ஒரு நிர்வாகி. அவருக்கு சபாநாயகரோ, பாராளுமன்றமோ கட்டுப்பட்டது அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என அரசியல் அமைப்புச் சட்டத்தின் 70ஆவது சரத்து தெளிவாகக் கூறுவதாக சில அரசியல் அமைப்பு சட்டவல்லுநர்கள் கூறுகின்றனர்,

சபாநாயகர் குற்றவியல் விசாரணை மனுவை ஏற்றுக் [illegible]

# சிறிலங்கா ஆளும் வட்டார நெருக்கடி பற்றிய ஒரு பார்வை

சிறிலங்காவின் ஆளும் வட்டாரத்துள் எழுந்துள்ள இன்றைய நெருக்கடி பற்றி பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் எழுந்துள்ளன. இவற்றுள், வர்க்கங்களுக்கிடையிலான போராட்டமாக இதனைக் கருதும் போக்கு மேலோங்கியிருப்பதாகத் தெரிகிறது. உண்மையில் இது வர்க்க பேதப் பிரச்சினை தானா? அல்லது ஒரு வர்க்கத்துக்குள்ளேயே முனைப்படைந்துள்ள முரண்பாடுகளின் வெளிப்பாடா? இதன் போக்கினை எவ்வாறு தீர்மானிப்பது போன்ற கேள்விகள் பலரிடம் எழுந்துள்ளன.

ஜனாதிபதிக்கெதிராக குற்றம் சுமத்தும் பிரேரணையொன்றுக்கான முன்னறிவித்தலை, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் மூலம் ஒரு பிரச்சினையாக இது இனம் காணப்பட்டுள்ளது. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீவிர வடிவம் கொடுத்திருக்கிறது. ஜனாதிபதி மீதான அதிருப்தியை வெளிக்காட்டியவர்களில் பிரதானமானவர்களான லலித், காமினி, பிரேமச்சந்திர கோஷ்டியுடன் எதிர்க்கட்சிகள் பலவும் ஒத்துழைக்க முன்வந்துள்ளன. லஞ்சம், ஊழல், தேசத்துரோகம், பயங்கரவாத கொலைக்குழு நடவடிக்கைகள் போன்ற ஜனாதிபதிக்கெதிராக தனிப்பட்ட ரீதியான சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களோடு, தனிநபர் சர்வாதிகாரத்திற்கு வழிகோலியுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைக்கெதிராகவும் அதிருப்தியாளர்கள் குரலெழுப்பியுள்ளனர்.


பிரேமதாசாவை மட்டந்தட்ட முனையும் போக்குகள் அவரது கட்சிக்குள்ளேயே கிளர்ந்துள்ள இன்றைய நிலையில், கடந்த காலத்தில் பாரியசலசலப்புக்களுக்கேனும் இடங்கொடாமல் எவ்வாறு அவரால் பதவிக்கு வர முடிந்தது? தனக்குரிய அதியுயர் அதிகாரத்தை எவ்வாறு வலுப்படுத்த முடிந்தது? என்பவற்றை நோக்குவது பொருத்தமானதாக எனக்குப்படுகிறது.

சிறிலங்காவின் அரசியல் அமைப்பின்படி உள்ள அதியுயர் அதிகாரபீடமான ஜனாதிபதி பதவியை பிரேமதாசா [illegible] போது

தார வேலை திட்டங்கள் இடம் பெற்றன. இவை ஓரளவுக்கு தன்னியல்பாகவும் பெருமளவுக்கு ஜே. வி. பி. போன்ற தீவிரவாத இயக்கங்களின் பின்னணியிலும் நடைபெற்றதாகக் கருதப்படுகிறது. எனினும் பெரும்பாலான மக்களுக்கு அரச நடவடிக்கைகளின் பாலான அதிருப்தியின் வெளிக்காட்டல்களாகவே இவை அமைந்திருந்ததெனக் கொள்வதில் தவறில்லை.

இவ்வாறாக வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகள் சிறிலங்கா ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் ஆட்சி அதிகாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் சூழ்நிலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முனைப்படைந்தது.

தவிர்க்க முடியாத அளவுக்கு பெருகி விட்ட இந்த நிலைமைகளை வெற்றி கொள்வதற்கான வழியாக, ஆளும் வர்க்கமானது தனது பாராளுமன்ற ஜனநாயக முகமூடியை - நடைமுறையில் கிழித்தெறிந்தது. அப்பட்டமான பாசிச சர்வாதி



காரத்தை உயர்த்திப் பிடித்தது. ''இந்தியப் படையே வெளியேறு'' என்ற கோஷத்தை பிரேமதாசா முழங்கினார். 88-89 காலப் பகுதியில் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

தமிழ் மக்களின் போராட்டத்தை தற்காலிகமாகவேனும் அணைய வைக்க முயற்சிக்கப்பட்டது. இதனைச் சாதிக்கக் கூடிய அதியுயர் அதிகாரங்கள் சித்தாந்த ரீதியாக ஜனாதிபதி பதவிக்கு வழங்கப்பட்டிருப்பதோடு, அதற்குத் தகுந்த [illegible]

ஏற்பது உண்மை எனினும், சாதியைக் கொண்டு மட்டுமே வர்க்க அடிப்படையைத் தீர்மானிக்க முற்படுவது முயற்கொம்பைத் தேடும் முயற்சியாக அமையலாம். பிரேமதாசா அடிமட்ட மக்களின் நலன்களை உண்மையாகவே முதன்மைப்படுத்தியிருந்தால்; வர்க்க ரீதியாக ஆகவும் சிறுபான்மையினருக்கே பெரும்பான்மையான நலன்களை உத்தரவாதப்படுத்துகின்ற இன்றைய அரசியல் பொருளாதார அமைப்பே தலைகீழாகிப் போயிருக்கும். ஆனால் அவர் பதவிக்கு வந்த பின்னரும்கூட அந்த அமைப்பு அதே ஆளும் வர்க்கத்துடன்

தனது அரசியல் எதிரிகளைக் கருவறுப்பதிலும் தொடர்ந்தும் அவனைப் பின்பற்றக் கூடும்.

அதிகாரங்கள் பெருமளவுக்கு ஓரிடத்தை நோக்கியே குவிக்கப்பட்டிருப்பதால் சிறுமைப்பட்டுள்ள ஆளும் வர்க்கத்தின் சில பிரிவினரின் அதிருப்தியின் வெளிப்பாடே இன்று எழுந்துள்ள நெருக்கடியாகும். சாராம்சத்தில் இது ஒரு வர்க்கத்துக்குள்ளே எழுந்துள்ள முரண்பாடுகளின் விளைவாகும். பெரிதும் கவனத்தை ஈர்ப்பது என்னவெனில், எந்த சாதியமைப் பின் பிற்பட்ட நிலையை ஒரு

**யதார்த்தப் பிரபஞ்சன்**

தொடர்ந்தும் பேணப்பட்டது. திருத்தமாகச் சொல்வதானால், அந்த அமைப்பு அப்படியே பேணப்படுவதற்காகவே பிரேமதாசா பதவிக்குக் கொண்டுவரப்பட்டார். அந்த நோக்கத்திற்கு முற்றிலும் விசுவாசமாகவே அவர் தொழிற்பட்டார். ஆளும் வர்க்கத்தை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றுவதற்காக தன்னால் முடியுமான அனைத்தையும் செய்தார். தேசியத் தலைவனாக(?) முன்னணியில் ஒலிக்க ஆங்காரக் குரலிலும், தெருத் தெருவாக எரிந்த டயர்களில் பிரேத நெடி வீசியதிலும் இதனைத் தெளிவாக உணரமுடிந்தது.

இந்த நிகழ்வுப்போக்கானது, கடந்தகால உலக வரலாற்று முன்னுதாரணமொன்றுடன் ஒப்பிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்துகிறது.

பாராளுமன்றத்தில் ஒரு பொதுவுடைமைவாதி பெரும்பான்மை உருவாகும் சாத்தியப்பாட்டினை சந்திப்பதற்கு பதிலாக, ஜேர்மானிய ஏகபோக முதலாளிகள் அதுவரை அவர்களுக்குச் சேவை செய்து வந்த முதலாளியப் பாராளுமன்ற முறைமை ஒதுக்கிவிட்டு வெளிப்படையான சர்வாதிகாரத்தினை ஏற்படுத்தினர். நாடு தழுவிய ரீதியாக கம்யூனிஸ்ட்டுக்களின் பலம் எழுச்சியடைந்து ஜேர்மானிய முதலாளிகளின் ஏகபோக அதிகாரத்தில் வீழ்ச்சி ஏற்படும் சூழ் [illegible]

அனுகூலமாகப் பயன்படுத்தி பிரேமதாசாவை முன்னே தள்ளினார்களோ அவர்களே இன்று தாம் சிறுமைப்பட்டுப் போயுள்ள நிலையில், அதே சாதிய முரண்பாட்டினைப் பயன்படுத்தி அவரைப் பின்னுக்கிழுக்க முயற்சிப்பது போலத் தோன்றுகிறது. இதுவே பிரேமதாசா 'ஏழைகளின் மக்களின் தாசனாக'' தன்னைப் பிரபல்யப்படுத்துவதற்கு உதவினாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

## தியாகி திலீபன் ஞாபகார்த்த விளை. போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக்கழகம் எதிர்வரும் திங்கட்கிழமை பி. ப. 1.00 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தியாகி திலீபன் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்துகொண்டு வீரர்களை உற்சாகப்படுத்துமாறு மேற்படி கழகம் கேட்டுள்ளது.

## சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி உயர்தர [illegible]

யுள்ளனர். மேலும் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் உண்டே ஒழிய சபாநாயகரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லை எனவும், அவரது கருத்து ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் சட்டமா அதிபர் ஒரு நிர்வாகி. அவருக்கு சபாநாயகரோ, பாராளுமன்றமோ கட்டுப்பட்டது அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என அரசியல் அமைப்புச் சட்டத்தின் 70ஆவது சரத்து தெளிவாகக் கூறுவதாக சில அரசியல் அமைப்பு சட்டவல்லுநர்கள் கூறுகின்றனர்,

சபாநாயகர் குற்றவியல் விசாரணை மனுவை ஏற்றுக் கொண்டு ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதோடு தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளமையால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு உத்தரவிட்டால் ஜனாதிபதியின் மீது வழக்கு தொடரப்பட முடியாது விட்டாலும் தேர்தல் ஆணையாளர் மீது வழக்குத் தொடர முடியும் எனவும் சட்டவல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

இவ்வாறாக குழப்பமும், ஓட்டைகளும் நிறைந்ததாக சிறிலங்கா அரசியற் சட்டம் உள்ளது. சிறிலங்கா அரசியல்வாதிகளும் அரசியற் சட்டத்தை எப்பொழுதும் ஓர் உயர்வான நிலையில் வைத்துப் பேணவில்லை. அவர்கள் தமது ஆட்சிக்கு எதிரானவர்கள் மீது அரசியலில் எவ்வாறு காலத்திற்குக் காலம் வஞ்சம் தீர்த்தார்களோ அதற்கேற்ப அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மாற்றி அமைத்தார்கள். சிறிலங்காவின் சுதந்திரத்தின் பின் அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றி அமைக்க ஆட்சியாளருக்கு எப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்ததோ அப்பொழுதே மாற்றி அமைத்தார்கள். 1972இலும் 1978இலும் இந்தமாற்றங்கள் இடம் பெற்றன.

இவ்வாறு நோக்கிலும், தமது தனிப்பட்டதும், கட்சியினதும் அதிகாரத்தை நிலை நிறுத்தும் நோக்கிலும்காலத்திற்கு காலம் மாற்றியும் திருத்தியும் அமைக்கப்பட்டதனால் அரசியல் அமைப்புச் சட்டங்கள் தற்பொழுது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. ஆனால், தற்பொழுது உள்ள அரசியல் சூழ்நிலையிலும், எதிர்காலச் சூழலிலும் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றக் கூடிய வசதிகள் எவருக்கும் ஏற்படப் போவதில்லை. ஆகையினால் அரசியல் நெருக்கடியும் அதனால் அரசியலமைப்பு நெருக்கடியும் நீண்டதொரு அம்சமாக சிறிலங்கா அரசியலில் தொடர்ந்தும் இருந்து கொண்டே இருக்கும்.

அவரது கட்சிக்குள்ளேயே கிளர்ந்துள்ள இன்றைய நிலையில், கடந்த காலத்தில் பாரியசலசலப்புக்களுக்கேனும் இடங்கொடாமல் எவ்வாறு அவரால் பதவிக்கு வர முடிந்தது? தனக்குரிய அதியுயர் அதிகாரத்தை எவ்வாறு வலுப்படுத்த முடிந்தது? என்பவற்றை நோக்குவது பொருத்தமானதாக எனக்குப்படுகிறது.

சிறிலங்காவின் அரசியல் அமைப்பின்படி உள்ள அதியுயர் அதிகாரபீடமான ஜனாதிபதி பதவியை பிரேமதாசா கையேற்ற போது; வெளிநாட்டு உள்நாட்டு ரீதியாக ஏற்பட்ட நெருக்கடிகள் பலவற்றிற்கு நாடு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அதிகாரத்தின் எல்லையையே குறுக்கி வரையறுக்க முற்படும் அளவுக்கு, தான் உரிமை கொண்டாடும் பிரதேச எல்லைக்குள்ளேயே அந்நிய அரச படைகளின் பிரசன்னத்துக்கு மத்தியில் பிரேமதாசா பதவிக்கு வந்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற போர்வையில், தமிழ் மக்களின் ஜனநாயக வாழ்வுக்கான போராட்டத்தினை நசுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தன. பொருளாதார தாராளமயமாக்கல் நடவடிக்கைகள், சாதாரண உணவுப் பொருள்களை கூட பெருமளவு மக்களுக்கு காட்சிப் பொருட்களாக்கி விட்டிருந்தது. பணவீக்கம் ஓர் உயர்ந்த கட்டத்தை எட்டியிருந்தது. ஒழுங்குபடுத்தப்படாத கட்டற்ற வன்முறை நடவடிக்கைகள் பரவலாக வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது கேந்திர நகர்ப் பிரதேசங்களில் அரசியல் நோக்குடைய பொருளா

தாரத்தை உயர்த்திப் பிடித்தது. ''இந்தியப் படையே வெளியேறு'' என்ற கோஷத்தை பிரேமதாசா முழங்கினார் 88-89 காலப் பகுதியில் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

தமிழ் மக்களின் போராட்டத்தை தற்காலிகமாக தணிய வைக்க முயற்சிக்கப்பட்டது. இதனைச் சாதிக்கக் கூடிய அதியுயர் அதிகாரங்கள் சித்தாந்த ரீதியாக ஜனாதிபதி பதவிக்கு வழங்கப்பட்டிருப்பதோடு, அதற்குத் தகுதியான மனிதராக பிரேமதாசா முன்னே தள்ளப்பட்டார். அன்று இருந்த சூழ்நிலையில் அவரை முன்னே தள்ளியதன் மூலம் தனது ஆட்சி அதிகாரத்திற்கு பங்கம் விளைவதினின்றும் தற்காத்துக் கொண்டது ஆளும் வர்க்கம். பிரேமதாசா முன்னுக்கு வருவதற்கு அநுகூலமான பலவிடயங்கள் அவரிலேயே அடங்கியிருந்தன. சிங்கள இனத்துவ சமூகத்துள் மேலாதிக்கம் பெற்றிருந்த சாதிய அமைப்பில், அவர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படுபவர். இதுவே ஆளும் வர்க்கத்திடமிருந்து பெரிதும் ஒதுங்கிய நிலையில் உள்ள பெரும்பாலான மக்களின் அமோக ஆதரவினை அவருக்கு வழங்கியது. பொருளாதார மற்றும் சமூக காரணங்களால் பின் தள்ளப்பட்ட மக்கள் அரசியல் அரங்கின் முன்னணிக்கு வருவதினின்றும் தடுக்கக்கூடிய உத்தரவாதமாகவும் செயற்பட்டது.

கால இடச் சூழ்நிலைகளுக்கேற்ப வர்க்கப் போராட்டமானது சாதிய முரண்பாடுகளின் தோற்றத்தை

பொதுவுடைமையாளர் பெரும்பான்மை உருவாகும் சாத்தியப்பாட்டினை சந்திப்பதற்குப் பதிலாக, ஜேர்மானிய ஏகபோக முதலாளிகள் அதுவரை அவர்களுக்குச் சேவை செய்து வந்த முதலாளியப் பாராளுமன்ற முறையை ஒதுக்கிவிட்டு வெளிப்படையான சர்வாதிகாரத்தினை ஏற்படுத்தினர். நாடு தழுவிய ரீதியாக கம்யூனிஸ்டுக்களின் பலம் வளர்ச்சியடைந்து ஜேர்மானிய முதலாளிகளின் ஏகபோக அதிகாரத்தில் வீழ்ச்சி ஏற்படும் சூழ்நிலையில், முதலாளிய அமைப்பின் பாதுகாவலனாகவும், சர்வாதிகாரத்தின் சிரமாகவும் ஹிட்லர் முன்னே தள்ளப்பட்டான். சர்வதேச அமைப்பில் தனக்கான மேலாதிக்க தலைமையை நிறுவ ஜேர்மானிய தேசியம் முற்பட்டது. உள்நாட்டில் கம்யூனிஸ்டுக்களும் ஜனநாயக சக்திகளும் வேட்டையாடப்பட்டனர். ஹிட்லரின் வருகை ஜேர்மனியின் பொருளியல் அடிக்கட்டுமான உறவுகளில் உடைவை ஏற்படுத்தவில்லை. மாறாக அதனைத் தொடர்ந்து பலப்படுத்தியது.

இந்த நிகழ்வானது சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் பிரேமதாசாவின் உயர்ச்சியைப் புரிந்துகொள்வதற்கு போதுமான சித்திரத்தினை வழங்குகின்றது. வெளிப்படையாகக் கூறுவதானால் - சிறிலங்காவின் அரசியல் பொருளாதார பரிமாணத்திற்கேற்ப - ஹிட்லரிசத்தின் தொடர்ச்சியாகவே பிரேமதாஸவிசம் அமைந்திருக்கிறது எனக் கருத முடியும் ஹிட்லரைப்போலவே சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தேசிய வேடம் பூணுவதில் தேர்ச்சிபெற்ற பிரேமதாசா

பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தியாகி திலீபன் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்துகொண்டு வீரர்களை உற்சாகப்படுத்துமாறு மேற்படி கழகம் கேட்டுள்ளது.

## சமூகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு பாடசாலைக்கு சமூகமளிக்கும்படி அதன் அதிபர் க. ராஜதுரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

90ம், 91ம், 92ம், 93ம் ஆண்டு உயர்தரவகுப்பு மாணவர்களையும் இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் தற்காலிகமாகக் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களையுமே அவர் சமூகமளிக்கக் கோருகிறார்.

தியாகத்துளி - 5

## மோதல்

கோரிக்கை சில வைத்து
குதித்தாய் நீ
தியாகப் போரில்...
'பாரி'யை பெற்ற
பாரதப் படையுடன்
நேருக்கு நேரே
மோதினாய்!

வாஞ்சிநாதன்

தியாகி திலீபனின் நினைவுநாள்

## வவுனியா மாவட்டத்தில் பரந்தளவில் ஏற்பாடு

(வவுனியா)

தியாகிதிலீபனின் நான்காம் ஆண்டு நினைவுதின நிகழ்ச்சிகள் வவுனியா மாவட்டத்தில் பெரியளவில் நடைபெற்று வருகின்றன.

அஞ்சலிக் கூட்டங்களும், சிரமதானங்களும், கலை நிகழ்ச்சிகளும், விளையாட்டுப் போட்டிகளும் பெரியளவில் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

பல இடங்களில் வீதி புனரமைப்பு வேலைகள் சிரமதான ரீதியில் நடைபெறுகின்றன.

தியாகி திலீபனின் நினைவு நாட்களில் கனகராயன் குளம் வடக்குப் பகுதியில் புதிதாக நரு மைல்நீளமுள்ள வீதியைத் திறந்து வைப்பதற்கும், மர ஓடுகை மேற் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## இராமநாதன் கல்லூரியில் திலீபன் நினைவு நாள்

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் இன்று (19-9-91) வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் மக்கள் முன்னணி பிரமுகர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அதைத் தொடர்ந்து கவியரங்கம், பட்டிமன்றம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்ச்சிகளை தனியார் கல்வி நிறுவன மருதனாமடக் கோட்டப் பிரிவினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

முல்லையில் இருந்து இடமாற்றம்;

## யாழ். வந்த ஆசிரியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றி பின்னர் யாழ் மாவட்டத்திற்கு மாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்கு வேண்டிய ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் இவ் ஆசிரியர்கள் எடுத்த லீவுகள் தொடர்பான விபரங்கள் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விபரங்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மருந்து

நோயாளிகளேபெரிதும்பாதிக்கப்படுவார்கள் என்று தனியார் வைத்திய சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது.

பல்லாயிரக்கணக்கான

களின் புகழுடலிகள் வைக்கப்பட்டிருந்தன. சுன்னாகம் நகரமே சோகமயமாகக் காட்சியளித்தது. பாடசாலைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. கடைகள், வீதிகள் தோறும் மஞ்சல், சிவப்பு நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததுடன், இருமருங்கிலும் தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன குழுமி இருந்த மக்கள் கதறியழ மாலையில் பதினாறு வேங்கைகளின் புகழுடல்களும் ஊர்திகளில் ஏற்றப்பட்டு ஊர்வல

சகல

ரிலே முன்னொருபோதும் மேற்கொள்ளப்படாத மிகப் பெரிய காட்டுச் சண்டை எனவும் இப்போரை அவர் வர்ணித்தார். கடந்த 29ஆம் திகதியில் இருந்து 10—15 வரையிலான புலிகளின் முகாம்களைத் தேடி அழிப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாக மேலும் அவ்வதிகாரி தெரிவித்தார்

மணலாறு

வரையில் 69 இராணுவத்தினர் மணலாறு மோதலில் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலினாலும், பெருமளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதினாலும் படை

## தடகள விழா கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவுதடகள விழா தொடர்பான கலந்துரையாடல் நாளை 20 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல விளையாட்டு உத்தியோகத்தர்களையும், இளைஞர்சேவை உத்தியோகத்தர்களையும், வட்டஅணை விளையாட்டுப்பொறுப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

## 16 அடி உயர திலீபன் திரு உருவப்படம்

நல்லூர் தியாகி திலீபன் ஞாபகார்த்ததூபி அருகில்பதினாறு அடி உயரமான திலீபனின் உருவப்படம் நேற்று மாலை நிறுவப்பட்டுள்ளது. இதைத் தேனீக்கள் அமைப்பு நிறுவியுள்ளது.

கூட்டம்

கட்சி, ஆகிய அமைப்புக்கள் இணைந்து கண்டனப்பொதுக் கூட்டம் ஒன்றை காஞ்சிபுரத்தில் நடாத்த முயற்சிக்கப்பட்டதாக ஏழு பேரையும்பொலிசார் கைது செய்துள்ளனர். மேலும்விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கோரிக்கைகளைக் கொண்ட சுவரொட்டிகளை ஒட்டியதற்காக ஆறு பேரை தமிழக பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திருச்சிராப்பள்ளியில் மூன்று பேரையும், பெரியார் மாவட்டத்தில் மூன்று பேரையும் தாம் கைது செய்ததாக தமிழக பொலிசார் தெரிவித்தனர்.

மதுரையில் இந்த மாதம் 7ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடைபெற்ற மாநாட்டை ஒட்டி கைது செய்யப்பட்ட ஆறுபேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மதுரையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொருள்கள்

13 ஆம் திகதி கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் உள்ள நல்லலிங்கம், செல்வபாக்கியம், சுந்தரலிங்கம், கனகசபை, சுந்தரராஜன் ஆகியோருக்குச் சொந்தமான வீடுகள் இராணுவத்தினரால் முற்றாகஎரிக்கப்பட்டது.

மேலும் கடந்த 16 ஆம் திகதி மூதூரில் வைத்து கணபதிப்பிள்ளை மார்க்கண்டு

மணலாறுக் காட்டில்

# இந்திய இராணுவம் கற்றதை சிறிலங்கா இராணுவம்கற்கிறது

-யோகி

''அன்று நாம் இந்திய இராணுவத்தினருக்கு மணலாறு மாவட்டத்தில் கற்பித்த பாடத்தையே தற்போது சிறிலங்கா இராணுவத்திற்குக் கற்பித்துக் கொண்டிருக்கிறோம்.''

இவ்வாறு மணலாறு யுத்தத்தில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்களை நேற்றுச் சுன்னாகம் சந்தைக் கட்டடத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் அஞ்சலியுரை நிகழ்த்துகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு.யோகி தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் உலகின் நான்காவது இராணுவ படையணியாகிய இந்திய இராணுவத்தினர் மணலாறு மாவட்டத்தில் வைத்தே கரந்தடிப் போரை எம்மிடம் கற்றுக் கொண்டனர்.

அதே மாவட்டத்தில் தற்பொழுதும் சிறிலங்காஇராணுவத்தினருடன் நாம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்தம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கிறோம். இங்கு கடந்த இருபது நாட்களாக நடைபெற்ற போரில் நூற்றி இருபத்தாறு புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மணலாறு பிரதேசத்தில் தமிழர்களை வெளியேற்றி விட்டு எழுபத்தையாயிரம் ஏக்கர் நிலப்பரப்பை வெலி ஓயா என்ற பெயரால் சிங்கள குடியேற்றமாக்கி அதனை அனுராதபுரத்துடன் இணைக்கும் கபட நோக்குடன் சிறிலங்கா அரசு இந்த யுத்தத்தை நிதானமாக நடாத்தி வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் இராணுவத்தினர் சம்பந்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், ஆனையிறவு யுத்தத்துடன் நாம் பலவீனமடைந்திருப்போம் எனவும் தற்போது இந்தியாவில் எமக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைத் தமக்குச் சாதகமாகக் கருதி இதுதான் புலிகளை அழிக்க தக்க தருணம் எனத் தப்புக்கணக்குப்போட்ட சிறிலங்கா அரசு மேற்படி யுத்தத்தைப் பாரிய அளவில் நடாத்தி வருகிறது

எதிரி எமது நிலப்பரப்புக்களைப் பிடித்து அங்கு கூடுதலான முகாம்களை அமைப்பதன்மூலம் அந்தப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்தி தமிழ் மக்களை அழிக்கலாம் எவ்வளவுக்கெவ்வளவு நிலப்பரப்புக்களைப் பிடித்து எவ்வளவுக்கெவ்வளவு முகாம்களை அமைக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அழிவுகளைச் சந்திப்பான்.

இதை வெற்றியென நினைத்து எதிரி வரலாம். ஆனால் அந்தளவிற்கு அது அவர்களுக்கான புதைகுழி என அவன் நினைக்கவில்லை.

இந்த மணலாறில் நாம் கொடுக்கும் பதிலடியுடன் எனிமேல் எதிரி எமது தாயகத்தை துண்டாடும் எண்ணத்தைநினைக்காதிருப்பதுடன் இனிமேல் இப்படியான தாக்குதலை நடாத்த முன்வரமாட்டான். இது மக்களாகிய உங்களது பூரண ஒத்துழைப்பினாலும் பங்களிப்பினாலும்தான் சாத்தியமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

# தாயகம் துண்டாடுவதை தடுக்கவே பெரும் போர் நடக்கிறது

- ரூபன்

எமது தாயகம் துண்டாடப்படுவதைத் தடுத்து நிறுத்தவே மணலாறில் உக்கிரமாகப் போராடி வருகிறோம். எதிரியானவன் நீண்டநாட்களாகத் திட்டமிட்டு வடதமிழீழத்தையும், தென் தமிழீழத்தையும் பூகோளரீதியாகப் பிரித்து அங்கே சிங்களவர்களைக் குடியேற்றுவதன்மூலம் எமக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தலாம் என கனவுகாணுகிறான்.

இவ்வாறு மணலாறில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்களுக்குச் சுன்னாகம் பகுதியில் நேற்று அஞ்சலி செலுத்தி உரை நிகழ்த்துகையில் திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரூபன் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எதிரியின் இத்திட்டத்தை முறியடிக்க வேண்டுமாயின் எம்மண் மீட்கப்படவேண்டுமாயின் இன்றே மக்கள் அனைவரும் அணி திரளவேண்டும். இல்லையேல் நாளை நாம் பெரிய இழப்புக்களைச் சந்திக்கவேண்டிவரும் எமது பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்படவேண்டுமாயின் இந்த மணலாறுப் பகுதி எம் கையில் இருக்கவேண்டும்.

எதிரி இவ்வளவு இழப்புக்களுடனும்இப்பகுதியில் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து பாரிய தாக்குதலை நடாத்துகின்றான் என்றால் இதன் முக்கியத்துவத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

நாம் எல்லோரும் போராளிகளாக மாறி ஓர் அணியின்கீழ் நின்று எமது மண்ணை மீட்போம் என இவ்விடத்தில் நின்று உறுதி எடுத்துக்கொள்வோம். எமது தலைவரின் புனிதமான கோரிக்கையை ஏற்றுப் போராட முன்வாருங்கள். மாவீரர்களின் கனவை நனவாக்க ஒத்துழையுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆண்டாள், ''எமது தாயகத்தைத் துண்டாட முனையும் சிறிலங்கா அரசின் சதித்திட்டத்தை முறியடிக்கவும் எமது தாயகத்தை மீட்கவும் நாம் இறுதிவரை ஒரே குடையின் கீழ் நின்று போராடுவோம். இதற்காக அனைவரும் எமது தேசிய தலைமையின் கீழ் அணி திரளவேண்டும்'' என அறைகூவல் விடுத்தார். (ச)

# எமது போராட்டத்தைக் கண்டு உலகமே வியந்து நிற்கிறது

**பல்லாயிரக்கணக்கான**

களின் புகழுடலிகள் வைக்கப் பட்டிருந்தன. சுன்னாகம் நகரமே சோகமயமாகக் காட்சியளித்தது. பாடசாலைகள், கடைகள் அனைத்தும் மூடப் பட்டிருந்தன. கடைகள், வீதிகள் தோறும் மஞ்சல், சிவப்பு நிறக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்ததுடன், இருமருங்கிலும் தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. குழுமி இருந்த மக்கள் கதறியழ மாலையில் பதினாறு வேங்கைகளின் புகழுடல்களும் ஊர்திகளில் ஏற்றப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. (ச)

திகதியில் இருந்து 10—15 வரையிலான புலிகளின் முகாம்களைத் தேடி அழிப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாக மேலும் அவ்வதிகாரி தெரிவித்தார்

**மணலாறு**

வரையில் 69 இராணுவத்தினர் மணலாறு மோதலில் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலினாலும், பெருமளவு கண்ணிவெடிகள் புதைக்கப் பட்டிருப்பதினாலும் படையினரின் முன்னேற்றம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தின் கீழ் மதுரையில காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**பொருள்கள்**

13 ஆம் திகதி கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் உள்ள நல்லலிங்கம், செல்வ பாக்கியம், சுந்தர லிங்கம், கனக சபை, சுந்தரராஜன் ஆகியோருக்குச் சொந்தமான வீடுகள் இராணுவத்தினரால் முற்றாகஎரிக்கப்பட்டது.

மேலும் கடந்த 16 ஆம் திகதி மூதூரில் வைத்து கணபதிபபிள்ளை மார்க்கண்டு (வயது 52) என்பவரையும் இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

**16ஆம் திகதி**

★ டயானி (நடராசா வாசுதன், மல்லாகம் நீதிமன்றவீதி)
★ சேகர் (ஏகாம்பரம் குணசேகர், நல்லூர் அருணா வீதி)
★ சந்தசாமி (வேலுப்பிள்ளை மகேந்திரம், பருத்தித்துறை கற்கோளம்)
★ மாதவன் (யோசப் குணதாஸ், பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத்தெரு)
★ சண் (வல்லிபுரம் புவனேந்திரராசா, தாவடிகுழி தச்சன் தோப்பு)
★ ஈஸ்வரன் (புஸ்பராசா கஜேந்திரன், வட்டுக் கோட்டை சித்தன்கேணி)
★ பிரதீப் (பத்மநாதன் இலக்சுமணன், கோப்பாய் பேச்சி அம்மன் கோயிலடி)
★ எட்றிக் (சிவகாமி கிருபாகரன், அல்வாய் மேற்கு)
★ இளஞ்செழியன் (மருதலிங்கம் சதீஸ்குமார், மல்லாகம் மாதா கோயிலடி)
★ வண்ணன் (சிவஞானசுந்தரம் ஜீவா, திருமலை வீரன் சேனை)
★ தாசன் (அல்விராசா யோகேந்திரன், பூநகரி பாடசாலையடி)
★ தோத்திரன் (கந்தப்பு மணியன், மட்டக்களப்பு பழுகாமம்)
★ பிமியன் (சின்னத்தம்பி யோகராசா, மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை)
★ கிறிஸ்ரி (பாக்கியதுரை தங்கராசா திருமலை குச்சவெளி)
★ சுரேஸ் (கந்தையா கனகலிங்கம், கிளிநொச்சி எல்லுக் காடு உருத்திரபுரம்)

மேலும் கடந்த 17 ஆம் திகதி

★ இரட்ணம் (நித்தியானந்தசிவம் லகுவரன், திலீபன் வீதி கோண்டாவில்) என்ற போராளியும் கடந்த 18ஆந் திகதி
★ விஜி (முத்துலிங்கம், கொத்தம்பியன்குளம் துணுக்காய்) என்ற போராளியும் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

**பாராளுமன்றக்**

அங்கீகாரம் வழங்கவேண்டி இருப்பதனாலும் இத்தகைய சூழலில் பாராளுமன்றத்தைக் கலைப்பது சாத்தியமில்லை என்றும்,

வடக்குக் கிழக்கில் அமைதியை உண்டுபண்ணுவதே இன்றைய தேவை என்றும் சமாதானம்,பாதுகாப்பு ஆகிய வற்றைப் பேணவும் பாராளுமன்றநடைமுறைகள்தேவைப் படுகின்றது என்றும் பிரேமதாசா தெரிவித்தார்

**தலைவர்**

தையும் தமிழருக்கு வழங்கியதாகத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் இந்திய அமைதி காக்கும் படையை நோக்கி புலிகள் தங்களின் துப்பாக்கியைத் திருப்பியதை அடுத்தே இந்திய அரசிற்கும் புலிகளுக்கும் இடையேயான மோதல் ஆரம்பித்தது. தொடர்ந்தும் அவர்கள் இதே நிலைப்பாட்டிலேயே இருப்பார்களானால் பாரதூரமான நிலைமையை எதிர்நோக்க அவர்கள் தயாராக வேண்டும் என்றும், அவர்கள் விவேகத்துடன் செயற்படுவார்கள் எனத்தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ளாம் என கனவுகாணுகிறான்.

இவ்வாறு மணலாறில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்களுக்குச் சுன்னாகம் பகுதியில் நேற்று அஞ்சலி செலுத்தி உரை நிகழ்த்துகையில் திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரூபன் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எதிரியின்

எதிரி இவ்வளவு இழப்புக்களுடனும் இப்பகுதியில் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து பாரிய தாக்குதலை நடாத்துகின்றான் என்றால் இதன் முக்கியத்துவத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

நாம் எல்லோரும் போராளிகளாக மாறி ஓர் அணியின்கீழ் நின்று எமது மண்ணை மீட்

சிறிலங்கா அரசின் சதித்திட்டத்தை முறியடிக்கவும் எமது தாயகத்தை மீட்கவும் நாம் இறுதிவரை ஒரே குடையின் கீழ் நின்று போராடுவோம். இதற்காக அனைவரும் எமது தேசிய தலைமையின் கீழ் அணி திரளவேண்டும்'' என அறைகூவல் விடுத்தார். (ச)

# எமது போராட்டத்தைக் கண்டு உலகமே வியந்து நிற்கிறது

**- கரிகாலன்**

(யாழ்ப்பாணம்)

'எமது தாயகத்தை மீட்பதற்கான எமது போராட்டத்தையும், எமது தேசிய தலைமைத்துவத்து…ான போராட்டத்தையும், இப்போராட்டத்தின் மூலம் எமது எதிரிகளை நாம் எமது தாயகத்தில் இருந்து விரட்டி அடிப்பதையும் பார்த்து இன்று உலகமேவியந்து நிற்கின்றது'. இவ்வாறு மணலாறு யுத்தத்தில்வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் சுன்னாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது அஞ்சலி உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் திரு. கரிகாலன் தெரிவித்தார்.

மேலும் அவர் உரை நிகழ்த்தும் போது எமது தாயகத்தை தென்தமிழீழம் வடதமிழீழத் எனத் துண்டாட நினைத்து மணலாறில் குவிக்கப்பட்ட சிங்களப்படையினரின் தலைகளை பந்தாடிய எமது வீரர்கள் இன்று எமது மண்ணிற்கு உரமாகியுள்ளனர். எதிர்காலத்தில் எமது சிறுவர்கள் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் ஓடி விளையாட வேண்டும் என்பதற்காக இவர்கள் இன்று தம்மை இரையாக்கியுள்ளனர்.

தமிழீழ பிரதேசங்களை ஆக்கிரமித்து அதனைத் தனது பிடிக்குள் கொண்டுவருவதற்காக சிறிலங்கா இராணுவம் எல்லாப்பகுதிகளிலிருந்தும் இராணுவத்தினரைக் கொண்டுவந்து மணலாறில் குவிக்கிறது. தென்தமிழீழத்தையும் வடதமிழீழத்தையும் துண்டாட இனவெறி அரசு மணலாறில் முப்படைகளின் பலத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி பல நாட்களாகப் போராடி வருகின்றது'

முப்படைகளையும்எதிர்த்து நெஞ்சுரத்துடன் நேருக்குநேர் மிக அருகருகே நின்று நடந்த போரிலேதான் இப்போராளிகள்வீரமரணமடைந்தார்கள். என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**வவுனியா**

ளார்.

வவுனியா நகரில் கடத்தல் வேலைகளுக்கு என்று சிறிலங்கா இராணுவத்தின் ஆசீர்வாதத்துடன் குழு ஒன்று செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (தி)

**உலர்**

அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அதன் செயலாளர் மயில்வாகனம் கேட்டுள்ளார். (ச)

**கரையோரங்களில் உள்ள**

## அகதிமுகாம்களைமத்தியில் அமைக்க முயற்சி

தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் அமைந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களை மூடிவிட்டு தமிழ்நாட்டில் உள்புற மாவட்டங்களுக்கு அவர்களை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாக மறுவாழ்வுத்துறை இயக்குனர் ராம்தாஸ் நாகபட்டினத்தில் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார். பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே இவ்வித இடமாற்றம் இடம்பெறுவதாக நாகபட்டினத்திலுள்ள அகதிமுகாம்களைச்சுற்றிப் பார்வையிட்ட பின்னர் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.